# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## Pr.O.P.No.80/2023

சாட்சி : RW– 1
பெயர் : திரு. சக்திவேல் தேதி : 09.10.2025

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். )

**குறுக்குவிசாரணை**:– ( மனுதாரர் தரப்பில்)

உயிலில் கண்ட சொத்து என் தகப்பனார் ராமுவிற்கு பாத்தியப்பட்டது ஆகும். எதிர்மனுதாரர்கள் என் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். 2 முதல் 5 எதிர்மனுதாரர்களுக்கு திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். அவர்கள் திருமணத்திற்கு பின்னிட்டு அவர்கள் கணவர் குடும்பத்துடன் வசித்து வருகிறார்கள். இரண்டு தங்கைகளில் ஒருவர் பவானியிலும், ஒருவர் நாமக்கல்லிலும் வசித்து வருகிறார். எனக்கு திருமணம் ஆகிவிட்டது. நான் மனுச்சொத்தில் குடியில்லை, வெளியில் குடியிருந்து வருகிறேன். மனுச்சொத்தில் என் தாயாரான மனுதாரர் வசித்து வருகிறார். என் தகப்பனார் உயிருடன் இருக்கும்போதே எங்களுக்கு திருமணம் ஆகிட்டது. என் தகப்பனார் உயில் எழுதிவைத்த விவரம் எனக்கு தெரியாது. என் தகப்பனாரின் கரும காரியத்தன்று தான் எனக்கு இந்த உயிலை பற்றி தெரியவந்தது. செல்லத்துரை என்பவர் உயிலைப்பற்றி சொன்னார். என் தாயார் என் தகப்பனாரின் பீரோவிலிருந்து உயிலை எடுத்தார். உயிலை செல்லத்துரை படித்து காண்பித்தார். உயிலில் 550 ச.அடிகள் கொண்ட இடமும், அதிலுள்ள வீடும் குறிப்பிடப்பட்டிருந்தது. உயிலை படித்து காண்பித்த போது நானும், எனது சகோதரிகளும், எனது தாயாரும் மற்றும் உறவினர்கள் சிலரும் இருந்தோம். உயிலுக்கு யாரும் ஆட்சேபணை தெரிவிக்கவில்லை.

Sd/- R. Velaras,
I Additional District Judge,
Salem

Sd/- R. Velaras,
I Additional District Judge,
Salem